©
தமிழ்நாடு அரசு
2014

பதிவெண்: எம். 344

# கோயம்பத்தூர் மாவட்ட அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது

கோயம்பத்தூர், ஜனவரி 27, 2014
[விஜய, தை 14 – திருவள்ளுவர் ஆண்டு 2044]

[எண் 1

## உள்ளாட்சித்துறை அறிவிக்கை

*[ந.க. எண். 9601/2010 (எம்.ஏ.—1), நாள் 16—12—2013.]*

**கோயம்பத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 பிரிவு 169**

**(A)(B)(C)(D)(E)(F)(G)(H)(I)(J)–ன்கீழ் பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பு**

கோயம்புத்தூர் மாநகராட்சி 1981 ம் வருடத்திய சட்ட பிரிவு எண். 169 (A) (B) (C) (D) (E) (F) (G) (H) (I) (J)-ன்படியும், அரசு ஆணை மற்றும் பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (தொழில் வரி) விதிகள் 1999, விதி 16–ன்படியும், அரசு ஆணை எண்.11 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 12.01.1999–ல் வழங்கப்பட்ட உத்தரவின்படியும், 01.04.2009 முதல் நடைமுறையில் உள்ள தொழில் வரி தொகையில் கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண். 203 நாள் 19.09.2013–ன்படி, 30% உயர்வு செய்து 01.04.2014 முதல் கீழ்க்கண்ட அட்டவணையில் கலம் எண்.4ல் கண்ட விகிதப்படி தொழில்வரி வசூல் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | அரையாண்டு சராசரி வருமானம் | தற்போது வசூலிக்கப்படும் தொழில்வரி தொகை | 01.04.2014 முதல் 30% திருத்தியமைத்து நிர்ணயம்செய்யப்பட்டுள்ள தொழில்வரி தொகை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | ரூ.21,000 வரை | இல்லை | இல்லை |
| 2 | ரூ.21,001 முதல் 30,000 வரை | ரூ.98/– | ரூ.127/– |
| 3 | ரூ.30,001 முதல் 45,000 வரை | ரூ.244/– | ரூ.317/– |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 4 | ரூ.45,001 முதல் 60,000 வரை | ரூ.488/- | ரூ.634/- |
| 5 | ரூ.60,001 முதல் 75,000 வரை | ரூ.731/- | ரூ.950/- |
| 6 | ரூ.75,000 க்கு மேல் | ரூ.975/- | ரூ.1268/- |

எனவே, கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் உள்ள வணிகர்கள், தொழில்புரிவோர், அரசு மற்றும் அரசுசாரா நிறுவனங்களில் தொழில்புரிவோர்கள் உள்ளிட்ட தொழில்வரி செலுத்த வேண்டிய அனைத்து தனிநபர், நிறுவனம், நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களிடமிருந்து மேற்கண்ட அட்டவணையின் கலம் எண்.4ல் கண்ட விவரப்படி, 01.04.2014 முதல் உயர்த்திய விகிதத்தில் தொழில்வரி வசூல் செய்யப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கோயம்பத்தூர்,
16-12-2013.

(ஒஇ) X X X ,
ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநரால் சேலம் அரசினர் கிளை அச்சகத்தில்
அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.